# வாக்குவாதத்தைக் கையாள மேலும் சில குறிப்புகள் (15:13-35)

*அந்தியோகியாவில் வாக்குவாதமானது தனது அழகற்ற தலையை உயர்த்தியது. எருசலேமில் இருந்து வந்திருந்த சகோதரர்கள், புறஜாதியார் விருத்தசேதனம் செய்துகொள்ள வேண்டும் என்றும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். அது இக்கட்டான தருணமாய் இருந்தது. இந்த வாக்குவாதமானது சரியானமுறையில் கையாளப்படாதிருந்தால், சபையானது - யூத கிறிஸ்தவர்கள் ஒரு புறத்திலும், புறஜாதிக் கிறிஸ்தவர்கள் ஒரு புறத்திலும் இருந்த நிலையில் - இடையில் இரண்டாகப் பிரிந்திருக்கும். பவுலும் பர்னபாவும் அயர்ச்சி அடைந்திருக்கக் கூடும். அவர்கள், "யூதகிறிஸ்தவர்களின் தப்பெண்ணத்தினால் நாங்கள் இளைத்துப் போனோம்; பட்டிணத்தின் மறுபுறம் சென்று நாங்கள் புறஜாதி கிறிஸ்தவர்களுக்கென்று வேறொரு சபையைத் தொடங்கப் போகின்றோம்" என்று கூறியிருக்கக் கூடும். இதற்கு மாறாக, அவர்கள் தங்கள் மன அமைதியைக் காத்துக் கொண்டு, வேறுபாடுகளைக் களைவதற்காக எருசலேமுக்குச் சென்றார்கள்.*

*வாக்குவாதத்தைக் கையாளும் கொள்கைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக அப். 15:1-35 பற்றிய நமது பாடத்தை, நாம் தொடருவோம். பவுல் மற்றும் பர்னபாவைப் போலவே நாமும் ஐக்கியத்தைத் தேடுவதில் செயல்படுபவர்களாய் இருக்க வேண்டும் (மத். 5:9).*

## *புத்தகத்துடன் நெருங்கியிருங்கள் (15:13-19)*

*நமது முந்திய பாடமானது, யாக்கோபின் பேச்சினிடையிலேயே, எல்லா வாதங்களிலும் நாம் தேவனுடைய வசனத்துடன் நெருங்கியிருக்க வேண்டும் என்று கூறுகையில் முடிவடைந்தது. அந்தச் சத்தியத்தையே நாம் அதிகமாய் வலியுறுத்திக் கொண்டிருக்க முடியாது. ஒரு கருத்து எவ்வளவு வசீகரமுடையதாய் இருந்தாலும், அது வேதாகமத்தின்படியானதல்லவென்றால், அது தேவனைப் பிரியப்படுத்துவதாய் இருக்க முடியாது.*

*கொர்நேலியு மற்றும் அவரது வீட்டார் ஆகியோரின் மனமாற்றமானது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமே என்று காண்பிக்க, யாக்கோபு, ஆமோஸ் 9:11, 12ல் இருந்து மேற்கோள் காட்டினார். யாக்கோபின் பிரசங்கத்தை அவர் மேற்கோள் காட்டுமிடத்திலிருந்து மறுபடியும் நாம் பற்றிக் கொள்வோம்:*

> *எப்படியெனில், மற்ற மனுஷரும்[1], என்னுடைய நாமந்தரிக்கப் படும் சகல ஜாதிகளும்[2] கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. உலகத் தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது (15:16-18).[3]*

*தாவீதின் சந்ததியை மறுபடியும் கட்டியெழுப்புவது பற்றி இந்தத் தீர்க்கதரிசனம் கூறியது - இது இயேசு பரத்துக்கேறி மகிமைப்பட்டபோது நடந்தேறியது[4] - இது, "மற்ற மனுஷர்" எல்லாருக்கும் கர்த்தரைத் தேடும்படியாக நடந்தேறும், இந்த "மற்ற மனுஷர்" என்பது "எல்லாப் புறஜாதியாரையும்" குறிப்பாக அடையாளப்படுத்துகின்றது என்று கூறப்பட்டது.*

*கிறிஸ்தவ யுகத்திற்கான தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களில் அவர் புறஜாதியாரையும் உள்ளடக்கியிருந்தார் என்பதை யாக்கோபு நிரூபித்திருந்தார், ஆனால் புறஜாதியார் விருத்தசேதனம் செய்து, பிரமாணத்தைக் கடைப்பிடிக்க*

வேண்டுமா கூடாதா என்ற விஷயத்துடன் இது எவ்விதத்தில் தொடர்புடையதாயிருந்தது? அமைதியின் அடிப்படையி லேயே யாக்கோபின் தீர்மானம் அமைந்தது: புறஜாதியாரும் தேவனுடைய திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தார்கள் என்று ஆமோஸ் வலியுறுத்தியிருந்தார், ஆனால் புறஜாதியார் அந்தத் திட்டங்களின் ஒரு பகுதியாக வேண்டுமானால், முதலில் அவர்கள் யூதர்களாக வேண்டும் என்று வெளிப்படை யாகவோ அல்லது மறைமுகமாகவோ அந்தத் தீர்க்கதரிசி எதையும் கூறவில்லை. "ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப் பண்ணலாகாது" (வ. 19) என்று யாக்கோபு முடித்தார்.[5] நமது முந்திய பாடத்தில் குறிப்பிட்ட படியாக, இது, "புறஜாதி கிறிஸ்தவர்கள் மீது நாம் விருத்த சேதனம் மற்றும் பிரமாணத்தைக் கடைப் பிடித்தல் ஆகியவற்றி னால் கட்டுப்பாடு செய்யக் கூடாது" என்று அர்த்தப் படுகின்றது.

## மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுங்கள் (15:20, 21)

"ஆகவே இது இவ்வழியில்தான் அமைய வேண்டும்" என்று யாக்கோபு அறிவிக்கவில்லை. மாறாக அவர், "[நாம் இப்படிச் செய்ய வேண்டுமென்று] *நான் தீர்மானிக்கிறேன்*" என்று அவர் கூறினார். முடிவை அவர் சபையாரின் மேல் திணிக்கவில்லை; மாறுபட்ட கண்ணோட்டம் கொண்டவர்களிடத்தில் மரியாதை காண்பித்து, கண்ணியத்துடன் அவர்கள் இணங்கி வருவதற்கு வாய்ப்பளித்தார். இவ்வரலாறு முழுவதிலும் மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல் என்பது தொடர்ந்து இழையோடுகின்றது.

இந்தப் பிரச்சனையின் உபதேச அம்சமானது, நடைமுறை நோக்கங்கள் எல்லாவற்றிற்காகவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது; பேதுரு, பவுல், பர்னபா மற்றும் யாக்கோபு ஆகிய அனைவரும் ஒரே விதமான முடிவுக்கு வந்திருந்தார்கள். ஆயினும் - இந்தப் பிரச்சனையின் நடைமுறைப் பகுதி என்ற - ஒரு பிரச்சனையை இன்னமும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது: தங்கள் வாழ்நாள் முழுவதும் பிரமாணத்தைக் கடைப் பிடித்திருந்த யூத கிறிஸ்தவர்கள், பிரமாணத்தை ஒருபோதும் கடைப்பிடிக்கா

திருந்த புறஜாதிக் கிறிஸ்தவர்களுடன் ஒன்றாக வாழ்வது எப்படி முடியும்? யாக்கோபு தமது உரையை முடிக்குமுன், அங்கிருந்தவர்களிடத்தில், ''விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர் களுக்கு நாம் எழுத வேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்" (வ. 20) என்று தமது தீர்மானத்தையும் தெரிவித்தார்.

வசனம் 29ல் கடைசியாகக் குறிப்பிடப்படும் இரண்டு விஷயங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்றும், யாக்கோபு அடிப்படையாக மூன்று தடைகளைக் குறிப் பிட்டார் என்றும் அநேகர் ஒப்புக் கொள்ளுகின்றார்கள்: முதலாவது, "விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகள்" ஆகும், இது பிற்பகுதியில், "விக்கிரகங்களுக்குப் படைத்தவை கள்'' என்று அடையாளப்படுத்தப்படுகின்றது (வ. 29), இது உணவின் ஒரு பகுதி மட்டும் பலிபீடத்தின் மேல் தகனிக்கப் பட்டது. மீதியிருந்த பகுதியானது சிலை வணக்கம் செய்யும் ஆசாரியர்கள் அல்லது மக்களால் உண்ணப்பட்டது. அவ்வுணவு முதல் தரமுடையதாகையால், அதில் சில பகுதியானது சந்தைக்குக் கொண்டு வரப்பட்டு, உயர்ந்த விலைக்கு விற்கப் படும். புறஜாதியிலிருந்து கிறிஸ்தவரானவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதிலும் இதை உண்டிருந்தார்கள், ஆனால் யூதகிறிஸ்தவர்கள் இதை உண்டதில்லை - அப்படிச் செய்வது அவர்களுக்குப் பெரும் குற்றமாயிருந்தது. இரண்டாவது தடை, ''வேசித்தனம்'' அல்லது சட்ட விரோதமான பாலுறவுத் தொடர்புகள் ஆகும். வேசித்தனமானது எப்பொழுதுமே தேவனால் கண்டனம் செய்யப்பட்டதாகும், ஆனால் அதைப் பற்றிப் போதிக்கப்படாத வரையிலும் அது தீங்குக் குறைவான தென்றே அநேக புறஜாதியாரால் கருதப்பட்டது. செனகா என்பவர் தமது நாட்களில் நிலவிய பாலியல் ஒழுக்கக்கேடு பற்றி, "மாசற்றதன்மை மிக அரிது என்று கூற முடியாது; அப்படி ஒன்று இல்லவே இல்லை" என்று எழுதினார், என்று John Waddey மேற்கோள்காட்டினார்.

மூன்றாவது தடை, ''நெருக்குண்டு செத்ததிலிருந்து விலகியிருத்தல்" ஆகும். பிந்திய நூற்றாண்டுகளில் விளக்கவுரை யாளர்கள் ''இரத்தம்'' என்ற வார்த்தையைக் கொலை செய்தலைக் குறிப்பிடுவதற்கு எடுத்துக் கொண்டார்கள்,

*ஆனால் அப். 15ல் "நெருக்குண்டு" மற்றும் "இரத்தம்" என்ற சொற்றொடர்களானவை அநேகமாக, புறஜாதியாரின் பொதுவான வழக்கங்களான மாமிசத்தையும் இரத்தத்தையும் கலந்து புசித்தல், மற்றும் விலங்குகளின் இரத்தத்தைக் குடித்தல் போன்றவைகளையே குறிப்பதாயிருக்கின்றன.[6] ஒரு யூதர் ஒரு மிருகத்தை அடிக்கும்போது, அதன் இரத்தத்தை வழிந்தோடும்படி செய்து, அந்த இரத்தத்தை தரையிலோ அல்லது பலிபீடத்திலோ ஊற்றிவிடுவார்.[7] (லேவி. 17:10-14; உபா. 12:16, 23-25) - ஏனென்றால் "மாம்சத்தின் உயிர் அதன் இரத்தத்தில் இருக்கிறது" என்று தேவன் போதித்தார் (லேவி. 17:11). மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட எந்த ஒரு யூதரும் புறஜாதியாரால் தயாரிக்கப்பட்ட எந்த ஒரு உணவையும் சந்தேகத்தோடுதான் நோக்குவார்.*

*யாக்கோபு ஏன் இந்த மூன்று விஷயங்களை மட்டும் தடைகளாகத் தேர்ந்தெடுத்தார் என்று நாம் உறுதியாகக் கூற முடிவதில்லை, ஆனால் நாம் கற்றறிய யூகங்கள் சிலவற்றை மேற்கொள்ள முடியும்: முதலாவது, இந்தத் தடைகள் புறஜாதியாரின் பொதுவான பழக்கங்களை, அநேகமாக, புறஜாதி கிறிஸ்தவர்களாலும் வேறு விதமான போதனை பெறும் வரையிலும் தொடர்ந்து வாழ்க்கையின் அம்சமாகப் பின்பற்றியிருக்கப்படக் கூடியதான பழக்கங்களைக் குறிப்பதாயிருந்தன.[8] இரண்டாவது, யாக்கோபினால் தடை செய்யப்பட்ட இந்த மூன்று நடைமுறைப் பழக்கங்களும், சபையில் யூதர் - புறஜாதியாரின் ஐக்கியத்தைப் பாதிப்பவைகளாயிருந்தன. இம்மூன்றில் இரண்டு பழக்கங்கள் தேவனுடைய குடும்பத்தின் முக்கியமானதொரு பழக்கமான ''ஐக்கிய விருந்தினை'' பாதித்தன. மூன்றாவது, இந்தத் தடைகளில் ஏதொன்றும் கூட யூதர்களுக்கு மட்டும் உரியதாயிருக்கவில்லை. விக்கிரகாராதனை, வேசித்தனம் மற்றும் இரத்தத்தைக் குடித்தல் ஆகிய இவை யாவும் மோசே பிரமாணத்தைப் பெறுமுன்னரும் கூட தவறானவைகளாகவே இருந்தன (ஆதி. 9:4). இவைகளைப் பற்றிய பிரமாணமானது குறைந்த பட்சம் ஜலப்பிரளயத்திற்குப் பின் தொடங்கிப் புறஜாதியாரைக் கட்டுப்படுத்தியது, ஆகவே புறஜாதியார் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தேவையில்லை என்று கூறும்போதே, அதற்கு முரண்பட்டதாகக் குற்றம் சாட்டப்படாத வகையில்,*

யாக்கோபு புறஜாதியாரை இம்மூன்று பழக்கங்களிலிருந்து விலகியிருக்கும்படி வற்புறுத்த முடிந்தது.

உண்மையில் யாக்கோபு புறஜாதிக் கிறிஸ்தவர்களிடத்தில், ''நியாயப்பிரமாணத்தைப் புறஜாதியார் கைக்கொள்வது குறித்து யூத கிறிஸ்தவர்களாகிய நாங்கள் உங்களுக்குச் சாதகமாகவே முடிவெடுத்து இருக்கின்றோம். இப்பொழுது நீங்கள், எங்களைச் சங்கடப்படுத்துகின்ற பழக்கங்களிலிருந்து விலகி எங்களுக்குச் சாதகமாகச் செயல்படுங்கள்'' என்றே கூறினார். சகோதரர்களுடன் நாம் கருத்து வேறுபடும்போது, அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

கூருணர்வின் ஒரு கடைசிப் பகுதியைக் கூறி யாக்கோபு தமது உரையை முடித்தார். நியாயப்பிரமாணத்தினால் புறஜாதியாரைக் கட்டுப்படுத்த விரும்பிய யூதர்கள் அநேகமாக மோசே எதைப் போதித்திருந்தார் என்று எவரொருவரும் அறியாதிருந்தார்களே என்று அதற்கு முன் பயந்திருந்திருக்க லாம். அவர்கள் கவலைப் படாதிருக்கும்படி யாக்கோபு கூறினார்: "மோசேயின் ஆகமங்கள் ஓய்வுநாள் தோறும் ஜெப ஆலயங்களில் வாசிக்கப்பட்டு வருகிறபடியால், பூர்வ காலந் தொடங்கிச் சகல பட்டணங்களிலும் அந்த ஆகமங்களைப் பிரசங்கிக்கிறவர்களும் உண்டே" என்றான் (வ. 21).

## அருள் நிறைவுடன் ஒப்புக் கொள்ளக்கூடியவராயிருங்கள் (15:22, 25)

யாக்கோபு தமது உரையை முடித்தபோது, குறிப்பிடத் தக்கதொரு ஆச்சரியமான விஷயம் நடந்தது: சபையார் யாவரும் அதை ஒப்புக் கொண்டார்கள். வசனம் 22ல், யாக்கோபின் பரிந்துரையின்படி அந்தியோகியா சபையா ருக்குக் கடிதம் எழுதி அனுப்புவது "அப்போஸ்தலருக்கும், மூப்பருக்கும், சபையாரெல்லாருக்கும் நலமாகக் கண்டது'' என்று கூறப்படுகின்றது. இக்கடிதத்தில் அவர்கள், "ஒருமனப் பட்டுக் கூடின எங்களுக்கு நலமாகக் கண்டது" (வ. 26) என்று குறிப்பிட்டார்கள். விருத்தசேதனக் கட்டுப்பாட்டாளர்கள்,

பேதுரு, பவுல், பர்னபா மற்றும் யாக்கோபு ஆகியோரின் ஏவுதல் கொண்ட முடிவை ஒப்புக் கொண்டார்கள் என்பது தெளிவாகும்.[9] விஷயம் அப்படியானால் (அப்படியாகவே காணப்படுகின்றது), அவர்கள், இன்றைய நாட்களில் தங்களின் வழியை வற்புறுத்தும் அநேகரைக் காட்டிலும் பெரிய மனிதர் களாயிருந்தார்கள் என்றாகின்றது. நம்மால் சமாதானமாய்ப் போகக் கூடிய ஆவிக்குரிய கொள்கையொன்று ஒரு பிரச்சனை யில் தொடர்புடையதாய் இராதவரைக்கும்,[10] நமது முன்னு ரிமைகள் பெரும்பான்மையோரின் முன்னுரிமைகளிலிருந்து மாறுபடும்போது, நாம் பெரும்பான்மையோரிலிருந்து மாறுபட்டு, ஒருமித்த முடிவெடுக்க வேண்டும்.

## இதை உங்களுக்கென்று சொந்தமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் (15:22-29)

கடிதம் அனுப்புவதென்று தீர்மானித்ததும், ''தங்களில் சிலரைத் தெரிந்து கொண்டு பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோகியாவுக்கு அனுப்புகிறது அப்போஸ்தலருக்கும் மூப்பருக்கும் சபையாரெல்லாருக்கும் நலமாகக் கண்டது'' (வ. 22அ). அந்த முடிவில் நாம் ஞானத்தைக் காண முடியும். பவுலும் பர்னபாவும் மட்டும் கடிதத்துடன் திரும்பி வந்திருந் தால், சந்தேகவாதிகள் அக்கடிதத்தை அவர்களே எழுதிக் கொண்டு வந்ததாகக் கூறியிருக்கக் கூடும். பிரதிநிதிகளை அனுப்பிய செயலானது அந்தச் சாத்தியக் கூறை நீக்கிப் போட்டது. இக்கடிதத்தை எடுத்துச் செல்ல இரண்டு மனிதர் கள் தெரிவு செய்யப்பட்டார்கள்: ''அவர்கள் யாரென்றால், சகோதரரில் விசேஷித்தவர்களாகிய பர்சபா என்று மறுபேர் கொண்ட யூதாவும் சீலாவுமே'' (வ. 22ஆ), அவர்கள் தீர்க்கதரிசிகளாகவும் இருந்தார்கள் (வ. 32). அவர்கள் எதற்காக அனுப்பப்பட்டார்கள் என்பதை அக்கடிதம் விளக்கப்படுத் தியது: ''அந்தப்படியே யூதாவையும் சீலாவையும் அனுப்பி யிருக்கிறோம். அவர்களும் இவைகளை வாய்மொழியாக உங்களுக்கு அறிவிப்பார்கள்'' (வ. 27). யூதாவும், சீலாவும், அக்கடிதம் உண்மையானது என்பதை உறுதி செய்து, மக்களின்

கேள்விகளுக்கும் பதில் அளிக்க முடிந்திருந்தது.

அக்கடிதம் ஏவுதல் பெற்றிருந்தது என்பதைக் கவனியுங்கள். அக்கடிதத்தின் முடிவுதறுவாயில், பின்வரும் வார்த்தைகள் இருந்தன: "... பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது ..." (வ. 29). ஏவுதல் பெற்று எழுதப்பட்ட முதலாவது நிருபம் என்று அறியப்படுவது இதுவேயாகும். இது, எருசலேமின் கூட்டமானது இன்றைய நாட்களில் நாமகரணக் கூட்டங்களின் மாநாடுகளிலிருந்து மாறுபட்டது என்பதற்கு இன்னொரு ஆதாரமாகும்: இந்த மாநாடுகள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட பதிவேடுகளை உண்டாக்க முடிவதில்லை, அவைகளை உண்டாக்குவதுமில்லை.

அக்கடிதமானது உணர்வைப் புரிந்து கொள்ளும் முன் மாதிரியாக, அந்நாட்களில் வழக்கத்தில் இருந்த பொதுவான வாழ்த்துடன் தொடங்கியது: "அப்போஸ்தலரும் மூப்பரும் சகோதரருமாகிய நாங்கள் அந்தியோகியாவிலும் சீரியாவிலும் இருக்கும் புறஜாதியாராகிய சகோதரருக்கு வாழ்த்துதல் சொல்லி எழுதிய நிருபம் என்னவென்றால்" (வ. 23). இந்த வாக்குவாதம் தொடங்கிய இடமான அந்தியோகியா பட்டணமானது சீரியாவும் சிலிசியாவும் இணைந்த மாநிலத்தின் தலைநகரமாக இருந்தது.[11] "சகோதரருக்கு" என்ற வார்த்தையை அடிக்கோடிடவும்; எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்கள், அந்தியோகியாவிலிருந்த கிறிஸ்தவர்களுடன் தங்களுக்குள்ள குடும்ப உறவு ஒன்றை முதலாவதாக ஒப்புக் கொண்டார்கள்.

அடுத்ததாக அக்கடிதமானது, அந்தியோகியாவுக்கு முன்பு வந்திருந்தவர்கள் எருசலேமில் இருந்த சபையைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லையென்றும், அவர்கள் மூலம் ஏற்பட்ட கலகத்திற்காகத் தங்கள் கவலையையும் விளக்கப்படுத்தியது:

> எங்களால் கட்டளைபெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் விருத்தசேதனமடைய வேண்டுமென்றும், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி, இப்படிப்பட்ட வார்த்தைகளால் உங்களைக் கலக்கி, உங்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டபடியினாலே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக் கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப் பிரியமானவர்களு

> *மாயிருக்கிற பர்னபா பவுல் என்பவர்களோடுங்கூட, எங்களால் தெரிந்துகொள்ளப்பட்ட சில மனுஷரை உங்களிடத்திற்கு அனுப்புகிறது ஒருமனப்பட்டுக் கூடின எங்களுக்கு நலமாகக் கண்டது. அந்தப்படியே யூதாவையும் சீலாவையும் அனுப்பி யிருக்கிறோம். அவர்களும் இவைகளை வாய்மொழியாக உங்களுக்கு அறிவிப்பார்கள் (வ. 24-27).*

பவுல், பர்னபா ஆகியோரின் ஊழியத்திற்குக் காண்பிக்கப் பட்ட உயர்ந்தபட்ச மரியாதையானது அந்தியோகியா சபையாரை மறைவான ஒரு குறிப்பினால் பலவந்தப்படுத்தி யிருக்கும்.

யாக்கோபினால் பரிந்துரைக்கப்பட்ட தடைகளுடன் இக்கடிதம் முடிவடைந்தது:

> *எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத் திற்கும் நீங்கள் விலகியிருக்க வேண்டுமென்பதே. அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள் மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது; இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக் கொள்வது நலமாயிருக்கும்; சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள் (வ. 28, 29).*

எருசலேமிலிருந்த சகோதரர்கள் இக்கடிதத்தை மட்டும் சார்ந்திருந்ததில்லை என்ற உண்மையை நான் அடிக் கோடிட்டுக் காண்பிக்கட்டும்; இக்கடிதத்துடன் அவர்கள் இரண்டு மனிதர்களை அனுப்பினார்கள். அவர்களின் பதிலானது ஆத்மார்த்தமானதென்று உறுதிப்படுத்தினார்கள்.

கடிதங்கள் மதிப்புள்ளவைகளாயிருக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.[12] "ஒவ்வொன்றையும் எழுத்தில் கொண்டு வருவதென்பது" பெரும்பாலும் நன்மை விளைவிக்கின்றது. இதற்கு மாறாக, வாக்குவாதம் என்ற தீயை அணைப்பதற்குப் பதிலாக, அதில் எண்ணெய் ஊற்றும் கடிதங்களையும் நான் கண்டிருக்கின்றேன் - விசேஷமாக, உணர்ச்சி மிகுதியில் எழுதும் கடிதங்கள் இவ்விதமான பண்புடையவைகளாய் இருக்கின்றன. கடிதங்களில் குறைபாடுகளும் இருக்கின்றன. கடிதத்தின் நோக்கத்தை வாசிப்பவர் தவறாகப் புரிந்து கொண்டால், அதன் உண்மை அர்த்தம் என்னவென்று விளக்குவதற்கு அதை எழுதியவர் அங்கிருப்பதில்லை.

கடிதத்தில் விமர்சனத்துக்குரிய வார்த்தைகள் இருந்தால், முகமுகமாய்ப் பேசும்போது கூறப்படும் முறையில் அந்த "வார்த்தைகள்" கடிதத்தில் கூறப்படுவதில்லை. மாறாக, அதைப் பெற்றவர், அவைகளை மறுபடியும் மறுபடியும் படிக்கும் போது, ஒவ்வொரு முறையும் இன்னும் அதிகமாய் மகிழ்ச்சி யற்றுப் போகின்றார்.

சபையின் வாக்குவாதம் ஒன்றில் நீங்கள் ஈடுபட்டிருந்தால், கடிதங்களைப் பற்றி என்னுடைய அறிவுரை பின்வரும் இருவிதங்களில் அமைகின்றது: (1) நீங்கள் ஒரு கடிதத்தை எழுத வேண்டியிருந்தால், எருசலேமில் இருந்தவர்கள் எழுதும்போது பெற்றிருந்த அதே உணர்வுப் பூர்வமாக அதை எழுதுங்கள். பொதுவான உள்ள ஒரு விதியின்படியாக, நீங்கள் வருத்தமான மனநிலையில் இருக்கும்போது கடிதத்தை எழுத வேண்டாம்; அல்லது அப்படி நீங்கள் எழுதினால், அதை ஜெபத்துடன் மற்றும் கவனத்துடன் அநேக முறை மறுபடியும் படித்துப் பார்த்து, அனுப்புவதற்குச் சிலநாள் காத்திருங்கள். (2) நேரில் பேசச் சாத்தியக் கூறுள்ள பட்சத்தில் கடிதம் எழுத வேண்டாம். சிலர், "நான் முகமுகமாய் எதிர்த்துப் பேச முடியாது. ஒரு கடிதத்தில் நான் நல்ல முறையில் விளக்கப்படுத்த முடியும்" என்று மறுப்புத் தெரிவிக்கலாம். அப்படியென்றால் எருசலே மின் சகோதரரிடத்திலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்; கடிதத்தை எழுதுங்கள்; ஆனால் அதை நேரடியாகக் கொடுங்கள்; அது வாசிக்கப்படுகையில் விளக்கம் தரவும், வினாவிற்கு விடை யளிக்கவும் அங்கு இருங்கள்.

மற்றவர்களுடனான உங்கள் நடவடிக்கைகளில் எப்பொழு தும் ஆத்மார்த்தமாக ஈடுபடுங்கள்.

## நேர்மறையான நடக்கையைக் காத்துக் கொள்ளுங்கள் (15:30-35)

நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும், வாக்குவாதத்தின் மூலம்-நாம் நேர்மறையான நடக்கைகளுடன் அதை சரியான வழியில் கையாண்டால் - நன்மையே விளையும். முன்னமே நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிருந்த பிரச்சனைகளை வெளிப்படுத்தும் வகையில் வாக்குவாதம் இருக்கக் கூடும். வாக்குவாதமானது நாம் பிரச்சனைகளை மறுஆய்வு செய்யும்

படியும் - தேவனுடைய சித்தத்தை இன்னும் நெருங்கி நாம் புரிந்து கொள்ளும்படியும் செய்யக் கூடும். நாம் புறக்கணித் திருந்த உறவுமுறைகளில் நாம் கிரியை செய்யும்படியும் வாக்குவாதம் நம்மைப் பலவந்தப்படுத்தக் கூடும். அப். 15ன் வாக்குவாதத்தைச் சரியான முறையில் கையாண்டதால் உண்டான நேர்மறையான விளைவுகளைப் பற்றி வசனம் 30 முதல் 35 வரை நமக்குக் கூறப்படுகின்றது.

*(1)* சந்தோஷம் உண்டாயிற்று. பவுலும் பர்னபாவும் எருசலேமிலிருந்து வந்த பிரதிநிதிகளுடன், "... அந்தியோகியா வுக்கு வந்து, சபையைக் கூடி வரச் செய்து, நிருபத்தை ஒப்புவித் தார்கள். அதை அவர்கள் வாசித்து, அதனாலுண்டாகிய ஆறுதலுக்காகச் சந்தோஷப்பட்டார்கள்" (வ. 30, 31). புறஜாதி யார்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தேவை யில்லை என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டிருந்ததற்காக அந்தியோகியாவின் சகோதரர்கள் ஆறுதல் அடைந்தார்கள்; வாக்குவாதம் முடிவடைந்ததற்காக அவர்கள் ஆறுதல் அடைந் தார்கள்; அவர்கள் செய்யும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்ட வைகள் கடினமானவைகளாய் இராததினால் அவர்கள் ஆறுதல் அடைந்தார்கள்.[13]

*(2)* தேவனுடைய வசனம் தொடர்ந்து பிரசங்கிக்கப் பட்டது. "யூதா சீலா என்பவர்களும் தீர்க்கதரிசிகளாயிருந்த படியினாலே அநேக வார்த்தைகளினால் சகோதரருக்குப் புத்தி சொல்லி, அவர்களைத் திடப்படுத்தி" (வ. 32; 20:7). வசனம் 35, "பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலே சஞ்சரித்து, வேறே அநேகரோடுங் கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள்" என்று குறிப்பிடுகின்றது (அப். 13:1).

*(3)* யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகியோருக்கிடையில் இருந்த உறவுகள் பலப்படுத்தப்பட்டன. வசனம் 33, "[யூதாவும் சீலாவும்] சில காலம் அங்கேயிருந்து, பின்பு சகோதரரால் சமாதானத்தோடே அனுப்பப்பட்டவர்களிடத்திற்கு அனுப்பி விடப்பட்டார்கள்" என்று கூறுகின்றது. "அவர்களை அனுப்பி யிருந்தவர்களிடத்தில் சமாதானத்தோடே" அனுப்பிவிடப்படு தல் என்பது, வந்திருந்த மனிதர்களையும், அவர்களை அனுப்பி யிருந்தவர்களையும் அந்தியோகியாவில் இருந்த சகோதரர்கள் மதித்துப் பாராட்டியதைச் சுட்டிக் காட்டுகின்றது.

*வாக்குவாதத்தின் மத்தியில் நேர்மறையான நடக்கையைக் கொண்டிருத்தல் என்பது கடினமானதாக இருக்கின்றது. "சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" என்ற (ரோமர் 8:28) கர்த்தரின் வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொள்ளுங்கள் - உங்களை இழந்துவிடாதீர்கள்!*

## முடிவுரை

*அப். 15:1-35 ஐப் பற்றிய நமது ஆய்வில், சபை சார்ந்த வாக்குவாதங்களை பற்றி - அவைகள் அப். 15ல் தீர்த்து வைக்கப்பட்டது போன்ற உபதேசக் கருத்து வேறுபாடா யிருந்தாலும் அல்லது கருத்தில் மாறுபாடாக இருந்தாலும் - கையாளுவதற்கான அநேக கொள்கைகளைக் கண்டறிந்தோம். நாம் படித்த யாவற்றையும் நம்மால் எவ்விதத்தில் தொகுத்துக் கூற முடியும்? அப். 15லிருந்து பெறப்பட்ட பின்வரும் ''ஒருமைப்பாட்டின் விதியை'' நான் விரும்புகின்றேன்: "கிருபையைப் பிரசங்கியுங்கள் மற்றும் அன்பை நடைமுறைப் படுத்துங்கள்.''[14] பேதுரு, ''நாம் கர்த்தராகிய இயேசுவின் கிருபையினாலே இரட்சிக்கப்படுகின்றோம்" (வ. 11) என்று கூறினார். இந்தப் பாடத்திலும், இதற்கு முந்திய பாடத்திலும் நாம், தாழ்மையாயிருத்தல், பிறர் உணர்வுகளை மதித்தல், சுயநலம் இல்லாதிருத்தல் மற்றும் உணர்வுடன் அணுகுதல் போன்ற பண்புகளைப் பெற்றிருத்தல் பற்றி வலியுறுத்த முயற்சி செய்திருக்கின்றோம் - இவை யாவும் "அன்பு" என்ற வார்த்தை யினால் தொகுத்துக் கூறப்பட முடியும். கருத்து வேறுபாடு எவ்விதமானதாயிருப்பினும், ''உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக் கடவது" (1 கொரி. 16:14). சத்தியத் திற்காக நீங்கள் எழுந்து நிற்க வேண்டிய வேளையிலும், அதை வெறுப்பில்லாமல் செய்யுங்கள் (எபே. 4:15). நமது வார்த்தை கள் மற்றும் கிரியைகளில் நாம் எப்போதுமே அன்பைக் காட்ட தேவன் நமக்கு உதவுவாராக!*


---

குறிப்புகள்

[1](*எபிரெய மொழி நடையில் அமைந்த) உங்கள் பழைய ஏற்பாட்டில், ஆமோஸ் 9:11ல் நீங்கள் ஏதோமியரைப் பற்றிய ஒரு குறிப்பைக் காண முடியும். செப்துவஜிந்த் (கிரேக்க மொழி பெயர்ப்பு) நூலில் எல்லா மனிதர்களையும்*

குறிப்பிடும் பொதுவான குறிப்புள்ளது. யாக்கோபு செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பிலிருந்து மேற்கோள் காட்டினார் என்பது தெளிவு. [2]F.F. புரூஸ் அவர்கள் "என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும்'' (வ. 17) என்ற இப்பகுதிக்குப் பின்வருமாறு விளக்கவுரையளித்தார்: "(ஞானஸ்நானத்தினால்) என்னுடைய நாமம் தரிக்கப்பட்ட சகல புறஜாதியாரும்" (*The Book of the Acts,* rev. ed., The New International Commentary on the New Testament [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988], 294). [3]ஆயிர வருட அரசாட்சிக்காரர்களில் பெரும்பாலானோர் ஆமோஸ் 9:11, 12 வசனப்பகுதியானது இயேசு இந்தப் பூமிக்கு மறுபடியும் வரும்போது எதிர்காலத்தில் நிறைவேறும் என்று போதிக்கின்றார்கள் ("அப். நட. 1" இதழில் சொற்பொருளகராதியில் "ஆயிரவருட அரசாட்சி" [Premillennialism] என்பதின் கீழ் காணவும்). ஆயினும், யாக்கோபு இவ்வசனப் பகுதியை புறஜாதியாருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்பியதை நிரூபிக்கவே பயன்படுத்தினார். யாக்கோபு போதித்திருந்தபடியாக ஆமோஸ் 9:11, 12 வசனமானது நிறைவேறியிருக்கவில்லை யென்றால், புறஜாதியார் எவரும் (நம்மில் பலர் உட்பட) கிறிஸ்தவராவதற்கு அனுமதிக்கப்படக் கூடாதே! [4]தாவீதின் கூடாரத்தை மறுபடியும் கட்டியெழுப்புதல் என்பது இஸ்ரவேலரின் நற்பேறுகள் யாவும் மேசியாவினால் முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வரப்படுதலைக் குறித்ததாக அநேக யூதர்களால் புரிந்து கொள்ளப்பட்டது. நாம் பார்த்திருக்கின்றபடி, தாவீதின் சிங்காசனமும், ராஜ்யமும் முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவரப்படுதல் பற்றிய தீர்க்கதரிசனங்கள் யாவும் இயேசுவுக்குள் நிறைவேறின (முந்திய இதழ் ஒன்றில் 1:6; 2:30; 3:21 ஆகியவற்றிற்கான குறிப்புகளைக் காணவும்). [5]கலாத்தியர் 2:2-10ல் நடந்த தனிப்பட்ட கூட்டத்தில், பேசுபவர்களின் வரிசை முறை தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். புறஜாதியார்கள் விருத்தசேதனம் செய்விக்கப்பட வேண்டும் என்றவர்களிடத்தில் மாபெரும் கனம்பெறும் என்பதற்காக யாக்கோபின் உரை கடைசியானதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். இதே காரணத்திற்காகவே புறஜாதியார் பிரமாணத்தைக் கடைபிடிக்கத் தேவையில்லை என்பதைத் தைரியமாய் வலியுறுத்தும்படி யாக்கோபும் முன்னதாகவே குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். [6]விக்கிரகம் ஒன்றிற்கு ஒரு மிருகமானது பலி செலுத்தப் படுகையில், அதன் இரத்தத்தில் சிறிதளவை அந்த விக்கிரகத்தை வழிபடுபவர் குடிப்பார். அத்துடன், பலமுள்ள விலங்குகளின் இரத்தத்தைக் குடிப்பது பொதுவான வழக்கமாயிருந்தது, ஏனெனில் அந்த மிருகத்தின் இரத்தத்தைக் குடிக்கையில் அதன் வீரம் தனக்கும் ஏற்படும் என்று சிலர் நம்பினார்கள். தாங்கள் வீழ்த்திய எதிரிகளின் இரத்தத்தைக் கூடச் சிலர் இதே காரணத்திற்காகக் குடித்தார்கள். [7]பலி செலுத்துவதற்காக ஒரு மிருகத்தை வெட்டும்போது அதன் இரத்தமானது பீடத்தின் மேல் ஊற்றப்பட்டது. உணவுக்காக ஒரு விலங்கைக் கொன்றால், அதன் இரத்தத்தைத் தரையில் ஊற்றிவிடுவார்கள். [8]முதலாம் நூற்றாண்டின் இறுதி வரையிலும் கூட புறஜாதியாரின் சபையார் இந்தப் பாவங்களுடன் போராடிக் கொண்டிருந்தார்கள் (வெளி. 2:14, 20 ஐக் காணவும்). [9]இந்தக் கூட்டம் நடத்தப்பட்ட விதத்தைக் கண்டபோது, விருத்தசேதனக் கொள்கைக்காரர்கள், முக்கியமான அந்த முடிவெடுக்கும் வேளையில் அங்கில்லாமல் வெளியேறி விட்டிருக்க வாய்ப்புள்ளது. "சபையார் எல்லாருக்கும்" என்ற சொற்றொடரானது தனித்தனி நபர்களின் முடிவைக் காட்டிலும், அவர்கள் யாவரும் பொதுவாக ஒப்புக் கொண்டதைக் குறிக்கின்றது. ஒவ்வொருவரும் கூட்டம் முடியும் வரை அங்கிருந்து, கடைசி முடிவை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டார்கள் என்பதே இவ்வசனப் பகுதியைப் புரிந்து கொள்ளும் இயல்பான வழியாகும். [10]விசுவாச விஷயங்களில், "பெரும்பான்மையோரின்" நிலைப்பாடு என்பது பொதுவாகத் தவறானதாகும் (யாத். 23:2; மத். 7:13, 14).

[11]பின்னாளில் பவுல் இந்த நிருபத்தை கலாத்தியா மற்றும் பிரிகியாவில் இருந்த சபைகளுடன் பகிர்ந்து கொண்டார் (16:4-6) - அந்தக் காலத்தில் இது எவ்வளவு தூரம் எடுத்துச் செல்லப்பட்டதென்று நாம் அறியவில்லை. அப். நடபடியில் இதை லூக்கா உள்ளடக்கியதானது இந்நிருபம் எல்லா சகோதரர்களுக்கும் அனுப் பப்பட்டதை நிறைவாய் உணர்த்துகின்றது. [12]புதிய ஏற்பாட்டின் இருபத்தியேழு புத்தகங்களில் இருபத்தியொரு புத்தகங்கள் கடிதங்களாகவே உள்ளன. [13]கூறப்பட்டவைகளைச் செய்வதற்குப் புறஜாதி கிறிஸ்தவர்கள் சந்தோஷமாய் ஒப்புக் கொண்டார்கள். வாக்குவாதங்கள் தீர்க்கப்பட வேண்டுமென்றால் இருதரப்பாரும் சற்று “விட்டுக் கொடுக்க” தயாராயிருக்க வேண்டும். [14]Rick Atchley, “The Concessions Stand”, Sermon preached at the Southern Hills church of Christ, Abilene, Texas, on 20 April 1986.




பவுலின் முதலாம் மற்றும் இரண்டாம் ஊழியப்பயணங்கள்